முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்
Provincial Department of Education, Northern Province

43 T I

| | |
|---|---|
| I | |
| II | |
| III | |
| மொத்தம் | |
| | |
| | |

நிலையறிபரீட்சை-2021

| தரம் 11 Grade 11 | சித்திரக் கலை I Art I | ஒரு மணித்தியாலம் One Hour |
|---|---|---|

சுட்டெண்

## பகுதி –I

- எல்லா வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலே விடை எழுதுக.
- கீழே தரப்பட்ட ஒளிப்படத்தை பயன்படுத்தி 1 தொடக்கம் 5 வரையான வினாக்களிலுள்ள இடைவெளியை நிரப்புக.



1. கி.பி 10 ஆம் நூற்றாண்டில்பொலநறுவையில் சோழர்களால் கட்டுவிக்கப்பட்ட இவ்வழிபாட்டிடம் ................................................... என அழைக்கப்படுகின்றது.
2. இராஜ ராஜ சோழனின் பட்டத்து ராணியை நினைவுகூரும் வகையில் அமைக்கப்பட்டமையால் இவ்வாலயம் ................................................................ என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.
3. தென் இந்தியச் ...................................... கட்டட நிர்மாணப் பாணியில் அமைந்துள்ளது.
4. இவ்வாலயத்தின் கர்ப்பக்கிரகத்துள் கல்லாலான ......................................வைக்கப்பட்டிருக்கிறது.
5. மூன்று அடுக்குகளைக் கொண்ட இதன் கூரை ......................................... வடிவமுடையது.

- 6 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு சரியான விடை எழுதுக.

6. ''பரிதிவட்டம் வீசுபவன்'' என்ற கிரேக்க சிறப்புக்கால சிலையை அமைத்த சிற்பி யார்?
...............................................................................................................................................................
7. கொழும்பு கலாபவனத்தில் வைக்கப்பட்டுள்ள ''ஓட்டுச் சூளை'' என்ற ஓவியத்தின் ஊடகம் யாது?..........................................................................................................................................................
8. திவங்க ஆலயத்தின் கர்ப்பக்கிரகத்தில் வரையப்பட்டுள்ள ஓவியம் எது?
...............................................................................................................................................................
9. டேவிட் பெயின்ரரினால் கிறிஸ்தவ சமய ஓவியங்கள் வரையப்பட்டுள்ள தேவாலயம் யாது?...............................................................................................................................................................
...........




kalvi.lk

10. பொலநறுவைக் காலத்திற்குரிய கல்விகாரையின் நின்ற நிலைப் புத்தர்சிலை வெளிப்படுத்தும் முத்திரை யாது ? ..........................................................................................................................................

● **11 தொடக்கம் 15 வரையுள்ள ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரே தரப்பட்டுள்ள படத்துடன் மிகவும் தொடர்புபட்டுள்ள A,B,C,D,E எனத் தரப்பட்டுள்ள படங்களிலிருந்து தெரிவு செய்து அதனைக் குறித்து நிற்கும் ஆங்கில எழுத்தை வினாவின் பொருத்தமான படத்திக்கு எதிரே உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

11.  (……..)  A

12  (……..)  B

13.  (………)  C

14.  (……....)  D

15.  (……… )  E



kalvi.lk

● **16 தொடக்கம் 20 வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

16. இசுறுமுனியாவில் அமைந்துள்ள பாறையில் செதுக்கப்பட்டுள்ள ''மனிதனும் குதிரைத்தலையும்'' செதுக்கலினால்

1. தீயிற்கு அதிபதியான அக்கினி பகவான் எடுத்துக் காட்டப்படுகிறார்.
2. நீருக்கு அதிபதியான வர்ண பகவான் எடுத்துக் காட்டப்படுகிறார்.
3. சூரிய வம்சத்தவனான அர்ச்சுனன் நினைவூட்டப் படுகிறான்.
4. அக்கினி பகவானும்,வர்ண பகவானும் சித்திரிக்கப் படுகின்றனர்

17. சிகிரியா ஓவியங்கள் "பிரெஸ்கோ புவனோ" எனப் பெயரிடப்பட்டது

1. இவ் ஓவியங்கள் நீடித்திருக்கும் காரணத்தினால்.
2. சாந்துக் கலவையின் மீது ஓவியங்கள் வரையப்பட்டுள்ளமையினால்.
3. நிறங்களும் ரேகைகளும் சாந்துக் கலவைக்குள் உறுஞ்சப்பட்டிருப்பதாக கருதப்படுவதால்
4. கலாநிதி செனரத் பரணவிதான இவ்வாறு கூறியிருப்பதனால்

18. சிற்பக் கலைஞர் ஹென்றி மூரின்படைப்புகளின் கலைப்பாணி

1. இயற்கைவாத பாணி
2. மனோரதியப்பாணி
3. கனவடிவ பாணி.
4. அரூப நிலை பாணி(Abstract)

19. பிக்காசோவின் ''அவிக்னோவின் யுவதிகள்'' என்ற ஓவியத்தினால் வெளிப்படுத்தப்படுவது

1. பெண்களின் ஐவரின் வாழ்கைத் தகவலாகும்.
2. பாசிலோனா நகரின் அழகிய பெண்கள் பற்றியதாகும்.
3. அழகிய பெண்களுக்கு மத்தியிலுள்ள அருவருக்கத்தக்க பெண்களாவர்.
4. விலைமாதர்களின் வெளித்தோற்றமும் அவர்களின் உள்ளார்ந்த அவலநிலையுமாகும்.

20. பங்குளியப் புத்தர்சிலையில் காணப்படும் முத்திரை வடிவங்கள்

1.வலது கையில் விதர்க்க முத்திரையும், இடது கையில் அபய முத்திரையும்
2. வலது கையில் கடகஹஸ்த முத்திரையும், இடது கையில் விதர்க்க முத்திரையும்
3. வலது கையில் விதர்க்க முத்திரையும், இடது கையில் கடகஹஸ்த முத்திரையும்
4. வலது கையில் தியாண முத்திரையும், இடது கையில் கடகஹஸ்த முத்திரையும்

● **21தொடக்கம் 25 வரையுள்ள சொற்களின் பொருள் விளங்கும் வகையில் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு கருத்துள்ள வாக்கியங்கள் எழுதுக.**

21.யாளி :-

………………………………………………………………………………………......................................

22. எத்கந்த லிகினியா:-

………………………………………………………………………………………......................................

23. கொரவக்கல்:-

………………………………………………………………………………………......................................



kalvi.lk

24. ரெறக்கொட்டா:-

…………………………………………………………………………………………………......................

25. வார்த்தல்:-

…………………………………………………………………………………………………......................

● **26 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு L,M,N,O,P என்னும் ஒளிப்படங்களை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.**


**L**


**M**


**N**


**O**


**P**

26. பொலநறுவைக் காலத்துக்குரிய L எழுத்தினால் குறிக்கப்படும் கட்டட அமைப்பின் பெயர் யாது ?.......................................................................................................................................

27. M எழுத்தினால் காட்டப்படும் சிலையானது எந்தக் கலைமரபிற்குரியது?

........................................................................................................................................................

28. “ஹென்றிமூர்” என்னும் கலைஞனால் படைக்கப்பட்ட N எழுத்தினால் குறிக்கப்படும் சிற்பம் ஆக்கப்பட்ட ஊடகம் யாது?........................................................................................................................

29. O எழுத்தினால் காட்டப்படும் கட்டிட தூண்கள் எந்த தாவரத்தினைப் போன்று அமைக்கப்பட்டன? ..........................................................................................................................

30 P என்ற எழுத்தினால் காட்டப்பட்ட சிலை கையில் தாங்கியுள்ள பொருள் தொடர்பாக பரணவிதான அவர்கள் கூறும் கருத்து யாது?...........................................................................................................................................................
...

● **31 தொடக்கம்35 வரையுள்ள வினாக்களிற்குரியஇடைவெளிகளில் பொருத்தமான விடை எழுதுக.**

31. நல்லூர் சட்டநாதர் ஆலயத்தில் “கூவும் வெள்ளைச் சேவல்”,“வெள்ளைக்கை ஐயரும் விநாயகரும்” போன்ற ஓவியங்களை வரைந்தவர் .................................................................... ஆவார்.

32. சிந்துவெளி சிற்பங்களிடையே மோடிப்படுத்தப்பட்ட ஒரு கலைப்படைப்பாககூறப்படுகின்ற ......................................................... என்ற சிற்பம் செஞ்சுண்ணக்கல்லால் ஆக்கப்பட்டது.

33. “பாறை மீதான கன்னி“ (virgin on the rocks) எனப் பெயர்தாங்கிய மடோனா ஓவியத்தை வரைந்தவர் ........................................................................ ஆவார்



kalvi.lk

34. பௌத்த மறுமலர்ச்சிக்காக செயற்பட்ட M. சார்லிஸ் தனது ஓவியங்களை .................................. அச்சுமுறையில் பதிப்பித்தார்.

35. தலதா மாளிகையின் பத்திரிப்புவ மண்டபத்தை அமைத்த பெருமை ............................................... என்ற கலைஞருக்குரியது.

- **36 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள சித்திரத்தை இனங்கண்டு அவதானித்த கலைத்திறன்களை மதிப்பீடு செய்யக்கூடியதான ஐந்து வாக்கியங்கள் எழுதுக.**
  ( தனிச்சொல்லால் விடை அளித்தால் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது )



36. இனங்காணல் :

..........................................................................................................................................................................

37. காணப்படும் இடம் :

..........................................................................................................................................................................

38. ஒழுங்கமைப்பு :

..........................................................................................................................................................................

39. வர்ணப் பிரயோகம் :

..........................................................................................................................................................................

40. உணர்வு வெளிப்பாடு :

..........................................................................................................................................................................



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page